# மலரட்டும் புத்தாண்டு!

எல்லோருக்கும் அருளும், பொருளும், அன்பும், ஆனந்தமும் நிறைந்த ஆண்டாக இந்தப் புதிய ஆண்டு திகழட்டும். இறைவனிடமிருந்து எல்லா வரங்களையும் பெற்று வளமுடன் வாழ ஓர் அழகான வழி உண்டு. அது தான் இறை நம்பிக்கை! நம்பிக்கை இருந்தால் உள்ளத்தில் சந்தோசம் உண்டாகும். உத்வேகம் கிடைக்கும். சக்தி உண்டாகும். வரங்கள் கிடைக்கும். நம்பிக்கையால் ஏறெடுக்கப் படும் செயல்கள் ஆச்சரியம் மிக்கவை. முக்கியமாகக, கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று நம்புகிறவர்களுக்கு வானம் கூட தொட்டு விடும் தூரம் தான். மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான் என்ற நம்பிக்கையோடு இந்த வருடத்தைத் தொடங்குவோம். எம் அம்மையும் அப்பனுமாகிய இறைவன் ஒரு போதும் எம்மைக் கை விட மாட்டார்.

**மலரும் 2017 என்னும் ஆண்டினை நாங்கள் உற்றுப் பார்க்கஒரு சில அறிகுறிகள் தென்படுகின்றன:**

-எம் கனடாவைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆண்டும் சராசரி மூன்று இலட்சம்(300,000) புதிய நாடு புகுவோரை **(Immigrants)** அனுமதித்த இந் நாடு, வரும் 2017-ஆம் ஆண்டிலிருந்து நாலரை இலட்சம் (450,000) பேரை அனுமதிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

-விஞ்ஞானத்தில், குறிப்பாகக் கணினித் துறையில் **(Computer Sciences)** பல முன்னேற்றங்கள் நடைமுறை வாழ்க்கையில் புகுத்தப் படலாம் என்று கருதப் படுகின்றது. இந்தியா இதற்கான முயற்சி ஒன்றினை தேச அளவில் ஏற்கனவே ஏறெடுத்து வெள்ளோட்டம் விட்டுப் பார்ப்பது எம் அனைவருக்கும் தெரிந்த விடயமே. தென்னமெரிக்க நாடுகள் இந்தியாவின் இம்முயற்சியை மிக உன்னிப்பாகப் பின் பற்றுகின்றன. இதன் விளைவுகளை தாங்களும் எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளலாம் என்று காத்திருந்து கவனிக்கின்றன.

சீனா அமெரிக்காவுடன் போட்டி போட்டுக் கொண்டு வல்லரசாக மாற தன்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது. இப்போட்டி உலகின் முன்னேற்றத்துக்கு அடித்தளமாக அமைய வாய்ப்புகள் பல உள்ளன என்று பலரும் கருதுகின்றனர்.

-ஆப்பிரிக்கக் கண்டம் சற்றுப் பொருளாதாரத்தில் பின்னோக்கிச் செல்வது அனைவருக்கும் பெரிய கேள்விக் குறியாக அமைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் ஆப்பிரிக்காவில் குடும்பக் கட்டுப்பாடு இன்மையால் சனங்கள் மிகவே கூடிக் கொண்டு செல்வதே முக்கிய காரணம் என்று பேசப் படுகிறது. ஆப்பிரிக்காவின் இன்றைய மக்கள் தொகை 100 கோடியாகும் **(1 billion)**. ஆப்பிரிக்காவின் ஜனத்தொகை ஒவ்வொரு வருடமும் அறுபது மில்லியன்கள் (ஆறு கோடி) கூடுகிறது.

-சோதிடர்களைப் பொறுத்த வரையில் வரும் ஆண்டு உலகம் முழுவதும் எதிர்க் கட்சிகளின் ஆண்டாகும் என்று சோசியர்கள் கூறியுள்ளனர். அதாவது அரசாங்கத்தை எதிர்த்துக் கத்துபவர்கள், பங்குத் தந்தைக்கு எதிராக நிற்பவர்கள் அனைவருக்கும் இது ராசியான ஆண்டாக அமையும் என்று எதிர் பார்க்கப் படுகிறது. எனவே மொத்தத்தில்2017-ஆம் ஆண்டு சவால் நிறைந்த ஆண்டாக அமையும் என்று நாம் கூறலாம்.

ஆனால் விசுவாசம் என்ற ஒன்று மட்டும் இருந்தால் மலரும் ஆண்டு இறைவனின் கொடையாகப் பிறப்பதை நாம் பார்க்கலாம். புது நம்பிக்கைச் சுடர் ஒளி வீசி எழுவதைக் காணலாம். ஒவ்வொருவரும் அடுத்தவருக்கு ஆசீர் வழங்கும் வாய்க்கால்களாக உருமாற நம்பிக்கைக்கு அடித் தளமிடப்படும். ஏனெனில் காலத் தொடக்கத்தில் உலகின் மேல் பொழியப்பட்ட அருளாசீர் இறைவனால் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வழங்கப் படுகிறது.

இன்றுஅன்னை மரியாள் ஆண்டின் தாயாக, அகிலத்தின் தாயாக, ஆண்டவனின் தாயாக எமக்கு அறிமுகமாகின்றாள். இறை அன்னையின் அரவணைப்பும் ஆதரவும் ஆண்டு முழுவதும் எமக்கு உரித்தாவனவாக. கடவுள் எம்மீது இரங்கி எமக்கு ஆசீர் வழங்குவாராக!

**அனைவருக்கும் உளங்கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

Rev. Fr. Tiburtius Fernandez. SMA